1982 மார்ச் 25]

கப்பட்ட பணம் அந்த வேலைகளுக்காக முழுமையாக செலவழிக்கப்பட்டு இருக்கிறதா? அந்த வேலைகளைக் கான்ட்ராக்ட் முறையில் கொடுத்து இருப்பதால் தாமதப் படுகிறதா ? அதை விரைவில் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : தலைவர் அவர்களே, அங்கே பழுதுபார்ப்பதற்காக 1 லட்ச ரூபாய், 2 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்ட தொகை என்று நான் சொல்லவில்லை. அதற்காக செலவழிக்கப்பட்டது என்று தான் சொன்னேன். அது ஒரு பெரிய மருத்துவ மனை. அதற்கு ஒரு லட்ச ரூபாய். இரண்டு லட்ச ரூபாய் என்று ஒதுக்கினால் கூட அது போதாது என்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். ஆகவே, நமக்கு இருக்கும் நிதிநிலைமை களுக்கு ஏற்ப அந்த வேலைகளைச் செய்யவேண்டி இருக்கிறது. இந்த ஆண்டு 6 லட்ச ரூபாய் செலவில் ஒரு கட்டிடம் பெண்களுக்கான வார்ட் அமைப்பதற்காக கட்ட முயற்சி எடுத்து இருக்கிறோம். அதற்காக நிதி ஒதுக்கீடு செய்து இருக்கிறோம். அது முழுமையாகச் செலவிடப்படும். ஜாஸ்தியாகத் தேவைப்பட்டாலும் அதைப் பற்றி யோசிக்கலாம்.

திரு. ஆ. வெள்ளைச்சாமி : பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்ப்பாக்கம் மருத்துவ மனையில் உள்ள ஊழியர்களுக்கு குடியிருப்பு கட்டிக்கொடுக்க திட்டம் துவங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அப்படிப்பட்ட திட்டம் இல்லை.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

வாணியம்பாடியில் கழிவுநீரை அப்புறப்படுத்தும் திட்டம்.

*வினா எண் 656—திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாணியம்பாடி தோல்மண்டி உரிமையாளர்கள் பாரத் லெதர் கார்ப்பரேஷன் நிதி உதவியுடன் கழிவு நீரை அப்புறப்படுத்தும் திட்டத்திற்கு அரசிடம் நிதி உதவி கோரி னார்களா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்த நட வடிக்கை யாது?

[1982 மார்ச் 25

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : (அ) ஆம்.

(ஆ) இதுபற்றி புது டெல்லியுள்ள 'பாரத் லெதர் கார்ப்பரேஷனுடன்'' தொடர்பு கொள்ளப்பட்டுள்ளது.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடாற்காடு மாவட்டத்திலே உள்ள இந்த தோல் பதனிடும் தொழிற்சாலைகளால் பெரிதும் பாதிப்பு ஏற்படுகிறது. என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியும் என்று கருதுகிறேன். ஏழு நகர மன்றங்களுக்கு பாலாற்றில் இருந்து தண்ணீர் வழங்கப்படுகின்றன. இந்தக் கழிவுத் தண்ணீர் இன்னும் சில ஆண்டுகளில் இந்த பாலாற்றில் கலந்து வந்தால், 5 ஆண்டு காலத்திற்குள் அந்த நீர் குடிப்பதற்கே வாயக்கற்றதாக ஆகும் என்று சொல்லப்படுவது அமைச்சருக்குத் தெரியுமா? அந்த ஆற்றின் மூலம் பயிராகும் நிலங்களும் இதனால் பாதிக்கப்படும் என்பது அமைச்சருக்குத் தெரியுமா? மேலும், கிட்டத்தட்ட 100 கிராமங்கள் இதனால் குடிநீர் வசதி பெறுவதால் அவையும் பாதிக்கப்படும் என்பதை அரசு அறியுமா? இதைத் தடுக்க வழிமுறைகள் என்ன? இந்தப் பாலாற்று நீரின் மூலம்—பொல்யூஷன் காற்றாலும், குடிநீராலும் ஏற்படுவதால், அதிக அளவில் நோய் பரவுவதால், அதைத் தடுக்க விரைவாக நடவடிக்கை எடுக்க அரசு முன் வருமா?

(முற்பகல் 9-40).

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரிவென்ஷன் அன்ட் கன்ட்ரோல் ஆப் பொல்யூஷன் ஆக்ட் 1974 (சென்டிரல் ஆக்ட் 6 ஆப் 1974) என்ற அந்த சட்டத்தின் கீழ் இப்போது புதிதாக ஒரு ஸ்டேச்சுரி போர்டு அமைக்கப்பட்டுள்ளது. அந்த ஸ்டேச்சுரி போர்டு அமைத்து தமிழ்நாடு பிரவன்ஷன் அன்ட் கன்ட்ரோல் ஆப் வாட்டர் பொல்யூஷன் போர்டு என்று ஜி.ஓ.,எம். எஸ்., நெம்பர் 340. ஹெல்த், 19—2—1982 ஆம் தேதி உத்தரவு போட்டிருக்கிறோம். அந்த உத்தரவின்படி இப்போது புதிதாக அமைக்கப்பட்ட இந்த போர்டுதான் மிகத் தீவிரமாக இப்படிப் பட்ட வாட்டர் டிரிட் செய்யாமல் சுத்தப்படுத்தாமல் ஆற்றிற்குள் விடக்கூடாது என்று நடவடிக்கையை எடுத்துக் கொள்ள இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். சிவராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்படி பல நகரங்களிலேயிருந்தும் தோல் வொர்க்ஷாப் வைத்திருப்பவர்கள் ஆற்றிலே அந்த அசுத்த நீரை விடுவதை தடுக்க சர்க்கார் நடவடிக்கை எடுக்கவிருப்பதாக அமைச்சர் அவர்கள்

1982 மார்ச் 25]

சொன்னார்கள். அது குறித்து மத்திய அரசுக்கும் சிபாரிசு செய்யப்பட்டிருப்பதாக சொன்னார்கள். மத்திய சர்க்காரிலிருந்து எவ்வளவு பணம் இதற்கென கொடுக்கிறார்கள்? மானியமாக கொடுக்கிறார்களா? கடனாக கொடுக்கிறார்களா என்பதை அறிவிப்பதோடு மாநில சர்க்காரும் இதிலே ஏதாவது சேர்த்து செலுத்தும் வகையில் முடிவு எடுத்திருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: வாணியம்பாடி டேனர்ஸ்அசோசியேஷன்—தோல் வியாபாரத்தில் ஈடுபடக் கூடியவர்கள் அத்தனை பேரும் ஒன்று சேர்ந்து அசோசியேஷன் வைத்திருக்கிறார்கள். அந்தச் சங்கத்திலிருந்து நமக்கு தாக்கீது அனுப்பி, அந்த ரிப்போர்ட்டின்படி, அந்த பிராஜக்டுக்கு ரிக்கரிங் & நான் ரெக்கரிங் எக்ஸ்பெண்டிசர் அதாவது மூலக் கேள்வியிலே எழுப்பப்பட்டிருக்கிற பாரத் லெதர் கார்ப்பரேஷன் பிராஜக்ட்—அந்தப் ப்ராஜக்கட்டுக்காக ரெக்கரிங் எக்ஸ் பெண்டிச்சருக்காக 3.60 லட்சம் ரூபாய் செலவு ஆகும் என்றும், நான்-ரெக்கரிங் எக்பெண்டிசர் 81·2 லட்சம் செலவு ஆகும் என்றும் இருக்கிறது. இவ்வளவு பெரிய தொகை செலவு ஆகும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்தக் பாரத் லெதர் கார்ப்பரேஷன் தமிழக சர்க்கார், அதிலே பங்கு கொள்வதாக இருந்தால், கொண்டு வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். இவைகளை எல்லாம் அந்தக் சங்கத்தின் பிரதிநிதிகளை அழைத்துப் பேசிக் கொண்டிருக்கிறோம். சுமூகமான முடிவு ஏற்படக்கூடிய நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காசநோய் பரவாமல் தடுக்கும் திட்டம்.

*வினா எண் 657—திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் காசநோய் அதிக அளவில் பரவாமல் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: சென்னையிலும் மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் காசநோய் தடுப்பு இயக்கம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மருத்துவமனைகளிலும், ஆரம்ப சுகாதார மருத்துவமனைகளிலும் காசநோயைக் கண்டு அறியவும் சிகிச்சை மூலம் குணப்படுத்தவும் இலவச வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அவர்களுக்கு அருகாமையிலுள்ள மருத்துவமனையிலேயே இலவச சிகிச்சை அளிக்கப்படுகிறது.